# இராஜபாளையம் நகராட்சி

**20.08.2018**

திருவள்ளுவர் ஆண்டு 2047 விளம்பி வருடம் ஆவணி மாதம் 4ம் தேதி 2018ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 20ம் தேதி திங்கள் கிழமை இந்நகராட்சியின் பி.எஸ்.குமாரசாமி ராஜா நினைவுக் கூட்ட மண்டபத்தில் மாலை 04.00 மணிக்கு இந்நகர்மன்றத்தின் சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்

**வருகை– திரு.க.அச்சையா, எம்.எஸ்.சி.,எம்.பில் தனி அலுவலர்**

**1.**இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2018–2019 ஆம் ஆண்டில் கீழ் கண்ட திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள 13.08.2018 அன்று நடைபெற்ற 7வது மாநில உயர் அதிகார குழு கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

| I நுண் உர செயலாக்க மையம் அமைக்க (MICRO COMPOST CENTER) | | | | |
|---|---|---|---|---|
| எண்ணிக்கை | திறன் | மையம் உள் கட்டமைப்பு அமைக்க நிதி (லட்சத்தில்) | மன்ற உள் கட்டமைப்பு அமைக்க Road and ComPost Yard Way அமைக்க (லட்சத்தில்) | திட்டட நிதி ரூ.லட்டத்தில் |
| 3 | 5MT | ரூ.180.00<br>(3 X 60) | ரூ.39.00<br>(3 X 13) | ரூ.219.00 |
| 2 | 2 MT | ரூ.60.00<br>( 2X 30) | ரூ.13.00 | ரூ. 73.00 |
| | | | | ரூ.292.00 |

<u>II</u> உரக்கிடங்கு உரச்சுரங்கம் அமைக்க

| அளவு | திட்ட மதிப்பீடு ரூ.லட்சத்தில் |
|---|---|
| கன மீட்டர் | 441.00 |

<u>III</u> தனி நபர் கழிப்பிடம் கட்டுதல் (I.H.H.L)

| வீடுகளின் எண்ணிக்கை | கூடுதல் இலக்கு |
|---|---|
| 39788 | 2150 |

அதன் அடிப்படையில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் கீழ்க்கண்ட விபரப்படி மேற்கொள்ளலாம்.

I நுண் உர செயலாக்க மையம் M.C.C

| வரிசை எண் | பணியின் பெயர் | மதிப்பீடு லட்சத்தில் |
|---|---|---|
| 1. | மங்காபுரம் நகராட்சி பழைய மாட்டுக் கொட்டத்தில் 5.00 மெட்ரிக் டன் திறனுடைய நுண் உர செயலாக்க மையம் அமைக்க | ரூ.60.00 |
| 2. | மங்காபுரம் நகராட்சி பழைய மாட்டுக் கொட்டத்தில் அமைக்கப்படவுள்ள நுண் உர செயலாக்கம் மையத்திற்கு சாலை, சுற்று சுவர் உள்ளிட்ட உள்கட்டமைப்பு பணி மேற்கொள்ள | ரூ.13.00 |

| | | |
|---|---|---|
| 3. | ஸ்ரீரெங்கபாளையம் பகுதியில் 5.00 மெட்ரிக் டன் திறனுடைய நுண் உர செயலாக்கம் மையம் அமைக்க | ரூ.60.00 |
| 4. | ஸ்ரீரெங்கபாளையம் பகுதியில் அமையவுள்ள நுண் உர செயலாக்க மையத்திற்கு சாலை, சுற்று சுவர் உள்ளிட்ட உள்கட்டமைப்பு பணி மேற்கொள்ள | ரூ.13.00 |
| 5. | P.A.C.R.சாலை 5.00 மெட்ரிக் டன் திறனுடைய நுண் உர செயலாக்க மையம் அமைக்க | ரூ.60.00 |
| 6. | P.A.C.R.சாலையில் 5.00 மெட்ரிக் டன் நுண்உர செயலாக்க மையத்திற்கு சாலை, சுற்று சுவர் உள்ளிட்ட உள் கட்டமைப்பு பணி மேற்கொள்ள | ரூ.13.00 |
| 7. | மாடசாமி கோவில் ரோடு 60 அடி சாலையில் 2 மெட்ரிக் டன் திறனுடைய நுண் உர செயலாக்கம் மையம் அமைக்க | ரூ.30.00 |
| 8. | நகராட்சி அலுவலம் பின்புறம் 2 மெட்ரிக் டன் திறனுடைய நுண் உர செயலாக்கம் மையம் அமைக்க | ரூ.30.00 |
| 9. | மாடசாமி கோவில் ரோடு 60 அடி சாலை மற்றும் நகராட்சி அலுவலகம் பின்புறம் அமைய உள்ள நுண் உர செயலாக்க மையங்களுக்கு சாலை மாற்று சுற்று சுவர் உள்ளிட்ட உள்கட்டமைப்பு பணி மேற்கொள்ள | ரூ.13.00 |

II உயிரி சுரங்கம் அமைக்க ( BIO MINING)

| வரிசை எண் | பணியின் பெயர் | மதிப்பீடு லட்சத்தில் |
|---|---|---|
| 1. | அரசியார்பட்டி நகராட்சி உரக்கிடங்கில் குப்பை கழிவுகளை முழுமையாக அகற்ற உயிரி சுரங்கம் அமைக்க (BIO MINING) | ரூ.441.00 |
| | மொத்தம் | ரூ.441.00 |
| | மொத்தம் I and II கூடுதல் | ரூ.733.00 |

இனம் I மற்றும் IIல் கண்ட 1 முதல் 10 வரையிலான பணிகளுக்கு திட்ட மதிப்பீடு ரூ.733/– லட்சத்தின் முழுமான்யமாக ஒதுக்கி நிர்வாக அனுமதி வழங்க வேண்டி கருத்துகளை அனுப்பவும் இனம் III ல் கண்ட தனி நபர் கழிப்பிடம் கட்டும் பணிகளுக்கு திட்ட வழி காட்டி நெறி முறையின்படி மத்திய மாநில அரசுகளின் நிதி ஒதுக்கீடு போக நகராட்சி பங்கு தொகையினை பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு

1 இனம் I மற்றும் IIல் கண்ட 1 முதல் 10 வரையிலான பணிகளுக்கு திட்ட மதிப்பீடு ரூ.733/– லட்சத்தினை முழு மான்யமாக ஒதுக்கி நிர்வாக அனுமதி வழங்க வேண்டி சென்னை நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை–05 அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.

2.இனம் III ல் கண்ட தனி நபர் கழிப்பிடம் கட்டும் பணிகளுக்கு (IHHL) திட்ட வழி காட்டு நெறி முறையின்படி மத்திய மாநில அரசுகளின் பங்கு தொகை போக நகராட்சி பங்கு தொகையினை பொது நிதியில் இருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம். (இ1/2711/2018)

**தீர்மானம் எண்.621அனுமதிக்கப்பட்டது.**

**2.**நமது இந்திய திருநாட்டின் 72வது சுதந்திர தினவிழா 15.08.2018 புதன் கிழமை காலை 8.30 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் வைத்து நடைபெற உள்ளது. மேற்படி 72வது சுதந்திர தின விழா சிறப்பாக கொண்டாடுவதற்கு நகராட்சி அலுவலக வளாகத்தின் முன்பகுதியின், கட்டிட பகுதியில் சீரியல் செட், மின் விளக்குகள் அழகு படுத்துதல் தோரணம் கட்டுதல், மைக்செட் வசதிகள் செய்யவும்

கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. விலைப்புள்ளியை முடிவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வரிசை எண | வேவலையின் தன்மை | No.of day | ஸ்ரீமகாலட்சுமி சவுண்ட் சர்வீஸ் 52F ரயில்வே பீடர் ரோடு இராஜபாளையம் | | ஸ்ரீஞான சாஸ்தா சவுண்ட் சர்வீஸ் P.A.C.R.சாலை இராஜபாளையம் | |
|---|---|---|---|---|---|---|
| | | | Unit Rate | Amount | Unit Rate | Amount |
| 1 | Serial Set | 2 days | 25.00 | Rs. 7000.00 | 30.00 | Rs. 8400.00 |
| 2 | Top Serial | 2 days | 111.00 | Rs. 2420.00 | 120.00 | Rs. 2640.00 |
| 3 | Micset and Hord Loss Mic | 1 days | 750.00 | Rs. 750.00 | 800.00 | Rs. 800.00 |
| | | | TOTAL Rs. = | Rs.10170.00 | | Rs.11840.00 |

அலுவலக குறிப்பு

1.மேற்கண்ட பணி செய்ய குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஸ்ரீமகாலாட்சுமி எலக்ட்ரிக்கல்ஸ் சவுண்ட் சர்வீஸ் நிறுவனத்தாரின் விலைப்புள்ளியை ஏற்கலாம்.

2.மேற்கண்ட பணியை செய்ய ஆகும் செலவு தொகை ரூ.10170/–க்கும் (ரூபாய் பத்து ஆயிரத்தி நூற்றி எழுபது மட்டும்) மன்றம் அனுமதிக்கலாம். (பி4/5076/2010)

**தீர்மானம் எண்.622அனுமதிக்கப்பட்டது.**

**3.**இந்நகராட்சியில் ஆழ்துளை கிணறு தலைமை குடிநீர் தொட்டி பழைய ஜெனரேட்டர் எண் 2 மற்றும் 3 அருகில் பணி செய்தமைக்கு பிடித்தம் செய்யப்பட்ட வைப்புத் தொகை 1% முன் வைப்புத்தொகை பக்கம் 89 வரிசை எண் 276 ரூ.27500/– P.முருகன் என்பவருக்கு தொகை வழங்க காலாவதி ஆகிவிட்டதால் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (இ2/0005/2018)

அ.கு.

1.மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.623அனுமதிக்கப்பட்டது.**

**4.**இந்நகராட்சியில் ஆழ்துளை கிணறு தலைமை குடிநீர் தொட்டி பழைய ஜெனரேட்டர் எண் 2 மற்றும் 3 அருகில் பணி செய்தமைக்கு பிடித்தம் செய்யப்பட்ட வைப்புத் தொகை 1% முன் வைப்புத்தொகை பக்கம் 89 வரிசை எண் 277 ரூ.27500/– P.முருகன் என்பவருக்கு தொகை வழங்க காலாவதி ஆகிவிட்டதால் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (இ2/0003/2018)

அ.கு.

1.மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.624அனுமதிக்கப்பட்டது.**

**5.** இந்நகராட்சியில் ஆழ்துளை கிணறு தலைமை குடிநீர் தொட்டி கேரளா நாயுடு கட்டிடம் அருகில் பணி செய்தமைக்கு பிடித்தம் செய்யப்பட்ட வைப்புத் தொகை 1% முன் வைப்புத்தொகை பக்கம் 89 வரிசை எண் 275 ரூ.27500/– P.முருகன் என்பவருக்கு தொகை வழங்க காலாவதி ஆகிவிட்டதால் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (இ2/0004/2018)

அ.கு.

1.மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.625அனுமதிக்கப்பட்டது.**

6.இந்நகராட்சியில் தினக்கூலியாக (DBC) பணியாற்றும் பணியாளர்களுக்கு அவர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்படும் EPF தொகையீயனை கணணியில் பதிவிற்கும் செய்யும் பொருட்டு 06.08.2018ம் தேதி விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளியை முடிவு செய்யும் பொருட்டு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வரிசை எண் | நிறுவனத்தாரின் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1. | திரு.G.சிவராமராஜா<br>603 Ist Floor<br>P.A.C.R. Road<br>Rajapalayam | ஒரு மாதத்திற்கு ரூ.6,000/— வீதம் |
| 2 | GSR Raja Associates<br>7. Ist Floor<br>அய்யன் காம்ப்ளக்ஸ்<br>இராஜபாளையம் | ஒரு மாதத்திற்கு ரூ.7,000/— வீதம் |
| 3 | KLM Anterprises<br>67/3 2A அழகை நக;ா<br>இராஜபாளையம் | ஒரு மாதத்திற்கு ரூ.8,500/— வீதம் |

அ.கு.

1.மன்றம் அனுமதிக்கலாம்

2.குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.G.சிவராமராஜா நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.626அனுமதிக்கப்பட்டது.**

7.இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் டம்பர் பிளேசர் தொட்டிகள் பழுதடைந்துள்ளதால் திடக்கழிவு மேலாண்மை பணியான மக்கும் மற்றும் மக்காத குப்பை என தரம் பிரித்து வாங்கும் பணி அவசியம் என்பதால் முதற்கட்டமாக 15 டம்பர் பிளேசர் தொட்டிகளை பழுது பார்க்கும் பொருட்டு உத்தேச செலவு தொகை ரூ.4,80,000/— (ரூபாய் நான்க லட்சத்து என்பதாயிரம்)க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு

1.மன்றம் அனுமதிக்கலாம்

2.மேற்படி பழுதுப்பணிகள் பார்க்கும் பொருட்டு ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.627அனுமதிக்கப்பட்டது.**

8.இந்நகராட்சி பகுதியில் உள்ள 42 வார்டுகளிலும் தினந்தேமாறு சேகரமாகும் மக்கும் மற்றும் மக்காத குப்பை என தரம் பிரித்து வாங்கம் பணி தீவிரமாக நடைபெற்று வருவதால், அதற்கு போதுமானதாக தள்ளுவண்டிகள் இல்லாத காரணத்தினால் புதிய தள்ளு வண்டிகள் 30 பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் பொருட்டு அதற்கு செலவாகும் உத்தேச செலவுத்தொகை ரூ.3,50,000/— (ரூபாய் மூன்று லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு

1.மன்றம் அனுமதிக்கலாம்

2.மேற்படி ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.628அனுமதிக்கப்பட்டது.**

**9.**இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் உள்ள TN/84/C/4251 காம்பாக்ட் வாகனத்திற்கு 10.08.2018ல் தகுதி சான்று முடிவடையும் பொருட்டு கீழ்க்கண்ட பழுதுப்பணிகள் பார்க்க உத்தேச செலவுத் தொகை ரூ.1,60,068/– (ரூபாய் ஒரு லட்சத்து அறுபது ஆயிரத்தி அறுபத்தி எட்டும் மட்டும்) க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1.கிளார் பிளேட் புதியது மாற்றுதல்

2.நான்கு வீல் கிரிஸ் பேக்கிங் செய்தல்

3.பட்டை கட்டு உயர்த்துதல் மற்றும் பிரேக் லைனிங் சரி செய்தல்

4. ஹைட்ராலின் சிம் மாற்றுதல் ஆயில் லீக் சரி செய்தல்

5.சேசு வெல்டிங், குப்பை பிளாட் வெல்டிங் சரி செய்தல்

6.கிரிஸ் பின் மாற்றுதல், டோர் பீடிங் சரி செய்தல்

7.ஜாயின்டு ஸ்டார் சரி செய்தல் மற்றும் PTO சரி செய்தல்

8.பேக்சைடு ரப்பர் பெல்ட் புதியது

9.கியர் ஆயில், இன்ஜின் ஆயில் மாற்றுதல் கூவண்டு ஆயில் மாற்றுதல்

10.சீட் கவல் புதியது, பிளேடு உள்ளே சரி செய்தல்

11.வீல் அலாய்மெண்ட், வாட்டர் சர்வீஸ் செய்தல்

12.வயரிங் வேலை, எதுத்து வேலை, பெயின்டிங் சரி செய்தல்

அ.கு

1.மன்றம் அனுமதிக்கலாம்

2.மேற்படி பணிகளை மேற்கொள்ள TVS நிறுவனத்தாரர் விலைப்புள்ளி கொடுத்துள்ளதால், மேற்படி நிறுவனம் அரசு அங்கீகாரம் பெற்றதால் நேரிடையாக பழுதுப்பணிகள் பார்க்கவும் மன்றம் அனுமதிக்கலாம். (எச்1/4221/2018)

**தீர்மானம் எண்.629அனுமதிக்கப்பட்டது.**

**10.** இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் உள்ள TN/84/C/4249 மினி லாரிக்கு 10.08.2018ல் தகுதி சான்று முடிவடையும் நிலையும் கீழ்க்கண்ட பழுதுப்பணிகள் பார்க்க உத்தேச செலவுத் தொகை ரூ.1,35,000/– (ரூபாய் ஒரு லட்சத்து முப்பத்தி ஐந்தாயிரம் மட்டும்) க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

1.கம்பிளிட் வாட்டர் சர்வீஸ் செய்து கிரிஸ் ஜாப்பிரிண்ட் செய்தல்

2.4 எண்ணம் வீல் கிரிஸ் பேக்கிங் செய்து பழுது பேரிங் செய்தல்

3.கம்ளிட் ஆயில் சர்வீஸ் செய்து டீசல் பில்டர் ஆயில் பில்டர், ஏர் பில்டர் புதியது மாற்றுதல்

4.கியர்பாக்ஸ் டாப்பியர் பட்டை புதியது மாற்றுதல்

5.பின் பகுதி பின்னல் வெட்ஸ்கள் புதியது மாற்றுதல்

6.கம்ளிட் பெயிண்டிங் செய்து எழுதுதல்

7.கம்ளிட் ஏர் ஷேறாய்லீங் சரி செய்து அன்கிலேட்டம் கேபிள் புதியது மாற்றுதல்

8.பவர் டியரிங் ஆயில் லீக் சரி செய்து டேங்க் கிளினிங்

அ.கு

1.மன்றம் அனுமதிக்கலாம்

2.மேற்படி பணிகளை மேற்கொள்ள TVS நிறுவனத்தாரர் விலைப்புள்ளி கொடுத்துள்ளதால், மேற்படி நிறுவனம் அரசு அங்கீகாரம் பெற்றதால் நேரிடையாக பழுதுப்பணிகள் பார்க்கவும் மன்றம் அனுமதிக்கலாம். (எச்1/3437/2018)

**தீர்மானம் எண்.630அனுமதிக்கப்பட்டது.**

**11.** இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் உள்ள TN/67/AM/0619 டம்பர் பிளேசர் வாகனம் பழுதடைந்துள்ளதால் மேற்படி வாகனத்தில் உள்ள கீழ்க்கண்ட பழுதுப்பணிகள் பார்க்கும் பொருட்டு உத்தேச செலவுத் தொகை ரூ.72,000/– (ரூபாய் எழுபத்தி இரண்டு ஆயிரம் மட்டும்) க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

1. 4 வீல் கிரிஸ் பேக்கிங் செய்தல்

2. வயரிங் மற்றும் எதுத்து வேலை செய்தல்

3.ஆயில் பில்டர், டீசல் பில்டர் புதியது மாற்றுதல்

4.பிளாட் பாரம் சேல்ஸ் மற்றும் தகடு புதியது

5.கிளர்ச் பிளேட் புதியது மாற்றுதல்

6.பிரேச் லைனிங் புதியது மாற்றுதல்

7.ஏர்நஸ் புதியது  ஹைறட்ராளிக் பம்பு

8.பெயிண்டிங் வேலை செய்தல்

9.வேகக் கட்டுக்பாட்டு கருவி பொருத்துதல்

10.இன்ஜின் ஆயில், கியர் ஆயில், நைட்ராலிக் ஆயில், பிரேக் ஆயில்

11.பேணட்டு புஸ் இரண்டு புதியது

12.நான்கு பட்டை கட்டு டெம்பர் அடித்து புஸ் புதியது

அ.கு

1.மன்றம் அனுமதிக்கலாம்

2.மேற்படி பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி பெறவும் மன்றம் அனுமதிக்கலாம். (எச்1/4046/2018)

**தீர்மானம் எண்.631அனுமதிக்கப்பட்டது.**

**12.**இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் உள்ள TN/67/AL/6674 கொசு ஒழிப்பு வாகனத்தை கீழ்க்கண்ட பழுதுப்பணிகள் பார்க்கும் பொருட்டு உத்தேச செலவுத் தொகை ரூ.35,100/– (ரூபாய் முப்பத்தி ஐந்து ஆயிரத்தி நூறு மட்டும்) க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

1. 4 வீல்களுக்கு கிரிஸ் பேக்கிங் செய்து பழுது பேரிங்

2.வலது பக்க டோர் கண்ணாடி சரி செய்தல்

3.என்ஜின் ஆயில் புதியது மாற்றி ஆயில் பில்டர், டீசல் பில்டர், ஏர் பில்டர் புதியது மாற்றுதல்

4.கம்ப்ளிட் பெயிண்டிங் செய்தல்

5.கம்ளிட் வயரிங் செக்கப் செய்து பழுது பல்புகள் மாற்றுதல்

6.வேக கட்டுப்பாட்டுக் கருவி புதியது மாற்றுதல்

அ.கு

1.மன்றம் அனுமதிக்கலாம்

2.மேற்படி பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(எச்1/1676/2018)

**தீர்மானம் எண்.632அனுமதிக்கப்பட்டது.**

13.இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட புதுப்பாளையம் விரிவாக்க அபிவிருத்தி திட்டம் 1ன் கீழ் அயன்புஞ்சை சர்வே எண் 361/3ல் கண்ட தங்களுக்கு பாத்தியப்பட்ட பட்டா நிலத்தை பள்ளி மற்றும் விளையாட்டு மைதானமாக நகர் ஊரமைப்பு ஆணையரக திட்ட இயக்கநரால் அரசிதழில் வெளியீடு செய்யப்பட்டதை மாற்றி விடுவிக்கக்கோரி, திருமதி.P.S.ரமணிதேவி என்பவரால் சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட WP(MD)No.15245/2018 வழக்கில் நகராட்சி ஆணையரை 1ம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக, சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை வழக்கறிஞர், திரு.N.திலிப்குமார் அவர்கள் ஆஜரானதற்கும், மேற்படி வழக்கின் செலவுத்தொகைக்கும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
(எப்1/2183/2018)

அ.கு

1.மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.633அனுமதிக்கப்பட்டது.**

14. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட புதுப்பாளையம் விரிவாக்க அபிவிருத்தி திட்டம் 1ன் கீழ் அயன்புஞ்சை சர்வே எண் 361/3ல் கண்ட தங்களுக்கு பாத்தியப்பட்ட பட்டா நிலத்தை பள்ளி மற்றும் விளையாட்டு மைதானமாக நகர் ஊரமைப்பு ஆணையரக திட்ட இயக்கநரால் அரசிதழில் வெளியீடு செய்யப்பட்டதை மாற்றி விடுவிக்கக்கோரி, திருமதி.R.சிட்டம்மாள் என்பவரால், சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட WP(MD)No.15246/2018 வழக்கில் நகராட்சி ஆணையரை 1ம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக, சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை வழக்கறிஞர், திரு.N.திலிப்குமார் அவர்கள் ஆஜரானதற்கும், மேற்படி வழக்கின் செலவுத்தொகைக்கும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
(எப்1/2183/2018)

அ.கு

1.மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.634அனுமதிக்கப்பட்டது.**

15.இராஜபாளையம் நகராட்சி கோடை குடிநீர் தேக்கத்தில் முழு கொள்ளளவான 20 அடி நீர் சேகரம் செய்யப்பட்டு வைக்கப்பட்டுள்ளது. அணையின் கரை பகுதியில் உள்ள புதர்கள் மற்றும் முட்செடிகள் அகற்றும் பணி மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. மேற்படி பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.25,000/– (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்)ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (இ2/2018)

அ.கு

1.அனுமதிக்கலாம்

2.மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.கே.பாலமுருகன் என்பவர் மூலம் மதிப்பீட்டு விலை விகிதத்தில் பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.635அனுமதிக்கப்பட்டது.**

16.இராஜபாளையம் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை பணிகள் BIO-GAS-PLANT மின் இணைப்பு எண்– 283–004–432ல் மும்முனை மின் இணைப்பு 16.5 KWHZ அளவிற்கு பெறப்பட்டது. தற்போது அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் தண்ணீர் பயன்பாட்டிற்கு ஆழ்துளை மின்மோட்டார் பயன்படுத்தப்பட இருப்பதால் கூடுதல் மின் பளு 20 KWHZ சேர்த்து 36.5 KWHZ இணைப்பு பெறுவதற்கு ஆகும் மதிப்பீட்டுக் கட்டணம் ரூ.28,310/– (ரூபாய் இருபத்தெட்டாயிரத்து முந்நூற்றி பத்து மட்டும்) தொட்டியபட்டி மின் பிரிவிற்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு

அ)மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ)மேற்படி பணியின் ஆகும் செலவுத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

இ)திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் பெற்று தொட்டியபட்டி மின்பிரிவிற்கு தொகை செலுத்தியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.636அனுமதிக்கப்பட்டது.**

17.இராஜபாளையம் நகராட்சி உரக்கிடங்கு பயோ மீத்தனேசன் பிளாண்டிங் தற்போதுள்ள 30 KW மும்முனை மின் இணைப்பிலிருந்து சர்வீஸ் கேபிள் 50 SQMM ஆக மாற்றி மீட்டர் பெட்டி திறனை அதிகரித்தல் உள்ளிட்ட மின் பணிகள் செய்யும் பணிக்கு 03.08.2018 அன்று ரூ.1.25 லட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

<u>ஒப்பந்தப்புள்ளிகள் விபரம்</u>

| வரிசை எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.எஸ்.பி.ராமச்சந்திரன் | மதிப்பீட்டுத் தொகையை விட 0.10 % சதவீதம் குறைவு |
| 2 | திரு.G.முருகானந்தம் | மதிப்பீட்டுத் தொகையை விட 3.01 % சதவீதம் அதிகம் |

அ.கு

அ) அனுமதிக்கலாம்

ஆ)வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டுத் தொகையை விட 0.10 % சதவீதம் குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள திரு.எஸ்.பி.ராமச்சந்திரன் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். மேற்டி பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.637அனுமதிக்கப்பட்டது.**

**18.**இந்நகராட்சியில் அலுவலக நடைமுறைகளை கண்காணிக்கும் பொருட்டு C.C.T.V.கேமிராக்கள் பொருத்தும் பணி நடைபெற்று வருகிறது.மேற்படி பணிக்கு தீர்மானம் எண் 596 நாள் 03.10.2015ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. மதிப்பீட்டு தொகை ரூ.3.25 (ரூபாய் மூன்று லட்சத்தி இருபத்தி ஐந்து ஆயிரம் மட்டும்) மன்றம் தீர்மான எண் 426 நாள் 12.02.2018ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும் அலுவலக நடைமுறைகளை ஒருங்கிணைந்து கண்காணிக்கும் பொருட்டு ஆணையாளர் அவர்கள் அறையில் 40ன்சி LED TV பொருத்த வேண்டியது உள்ளது. அதற்காகும் செலவினை தொகை ரூ.75,000/– (ரூபாய் எழுபத்தி ஐந்து ஆயிரம் மட்டும்) (GST வரிகள் உள்பட) மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு

1.கூடுதல் செலவினம் தொகை ரூ.75,000/–க்கு மன்றம் அனுமதிக்கலாம்

2.கூடுதல் செலவினத்தை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண்.638அனுமதிக்கப்பட்டது.**

**19.**நகர் ஊரமைப்பு இயக்குனர் (பொ) மதுரை அவர்களால் இந்நகராட்சி எல்லை திட்டமிட்ட பகுதியில் அனுமதியற்ற மனை பிரிவினை முறைப்படுத்தி தொழில் நுட்ப அனுமதி கடிதத்தில் கீழ்க்கண்ட அழகாபுரி பகுதியில் வார்டு H, பிளாக் 2, 19, நகரளவு எண் 72/2ல் கண்ட இடம் நகராட்சிக்கு பாத்தியப்பட்ட இடம் ஆகியதால் அவ்விடத்தில் உள்ள பூங்காவை பாதுகாக்கும் பொருட்டும், ஆக்கிரமிப்பு செய்திடாவண்ணம் முள்வேலி அமைக்க 27.07.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கு முடிவுக்கு

| வரிசை எண | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீடு விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.A.P.முத்துகிருஷ்ணராஜா | மதிப்பீட்டு தொகைக்கு 0.46% குறைவு |
| 2 | திரு.C.பாஸ்கரன் | மதிப்பீட்டு தொகைக்கு 5.96% அதிகம் |

அ.கு

1.வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் மதிப்பீட்டு ரேட்டை விட 0.46% குறைவாக கொடுத்துள்ள திரு.A.P.முத்துகிருஷ்ணராஜா ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

2.அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அலுவலரின் முன் அனுமதியை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.639அனுமதிக்கப்பட்டது.**

**20.**நகர் ஊரமைப்பு இயக்குனர் (பொ) மதுரை அவர்களால் இந்நகராட்சி எல்லை திட்டமிட்ட பகுதியில் அனுமதியற்ற மனை பிரிவினை முறைப்படுத்தி தொழில் நுட்ப அனுமதி கடிதத்தில் கீழ்க்கண்ட ஆர்.ஆர்.நகர் பகுதியில் வார்டு J, பிளாக் 15, நகரளவு எண் 13/1, 13/2ல் கண்ட இடம் நகராட்சிக்கு பாத்தியப்பட்ட இடம் ஆகியதால் அவ்விடத்தில் உள்ள பூங்காவை பாதுகாக்கும் பொருட்டும், ஆக்கிரமிப்பு செய்திடாவண்ணம்

முள்வேலி அமைக்க 27.07.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கு முடிவுக்கு

| வரிசை எண | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீடு விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.A.P.முத்துகிருஷ்ணராஜா | மதிப்பீட்டு தொகைக்கு 0.54% குறைவு |
| 2 | திரு.C.பாஸ்கரன் | மதிப்பீட்டு தொகைக்கு 7.11 % அதிகம் |

அ.கு

1.வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் மதிப்பீட்டு ரேட்டை விட 0.54% குறைவாக கொடுத்துள்ள திரு.A.P.முத்துகிருஷ்ணராஜா ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

2.அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அலுவலரின் முன் அனுமதியை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.640அனுமதிக்கப்பட்டது.**

21.நகர் ஊரமைப்பு இயக்குனர் (பொ) மதுரை அவர்களால் இந்நகராட்சி எல்லை திட்டமிட்ட பகுதியில் அனுமதியற்ற மனை பிரிவினை முறைப்படுத்தி தொழில் நுட்ப அனுமதி கடிதத்தில் கீழ்க்கண்ட ஆர்.ஆர்.நகர் பகுதியில் வார்டு J, பிளாக் 5, நகரளவு எண் 13/3ல் கண்ட இடம் நகராட்சிக்கு பாத்தியப்பட்ட இடம் ஆகியதால் அவ்விடத்தில் உள்ள பூங்காவை பாதுகாக்கும் பொருட்டும், ஆக்கிரமிப்பு செய்திடாவண்ணம் முன்வேலி அமைக்க 27.07.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கு முடிவுக்கு

| வரிசை எண | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீடு விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.A.P.முத்துகிருஷ்ணராஜா | மதிப்பீட்டு தொகைக்கு 0.49% குறைவு |
| 2 | திரு.C.பாஸ்கரன் | மதிப்பீட்டு தொகைக்கு 7.11 % அதிகம் |

அ.கு

1.வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் மதிப்பீட்டு ரேட்டை விட 0.49% குறைவாக கொடுத்துள்ள திரு.A.P.முத்துகிருஷ்ணராஜா ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

2.அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அலுவலரின் முன் அனுமதியை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.641அனுமதிக்கப்பட்டது.**

22.நகர் ஊரமைப்பு இயக்குனர் (பொ) மதுரை அவர்களால் இந்நகராட்சி எல்லை திட்டமிட்ட பகுதியில் அனுமதியற்ற மனை பிரிவினை முறைப்படுத்தி தொழில் நுட்ப அனுமதி கடிதத்தில் கீழ்க்கண்ட அழகாபுரி பகுதியில் வார்டு H, பிளாக் 2, 19 நகரளவு எண் 72/2, 163ல் கண்ட இடம் நகராட்சிக்கு பாத்தியப்பட்ட இடம் ஆகியதால் அவ்விடத்தில் உள்ள பூங்காவை பாதுகாக்கும் பொருட்டும், ஆக்கிரமிப்பு செய்திடாவண்ணம் முள்வேலி அமைக்க 27.07.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும்

| வரிசை எண | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீடு விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.A.P.முத்துகிருஷ்ணராஜா | மதிப்பீட்டு தொகைக்கு 0.45% குறைவு |
| 2 | திரு.C.பாஸ்கரன் | மதிப்பீட்டு தொகைக்கு 5.71 % அதிகம் |

அ.கு

1.வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் மதிப்பீட்டு ரேட்டை விட 0.45% குறைவாக கொடுத்துள்ள திரு.A.P.முத்துகிருஷ்ணராஜா ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

2.அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அலுவலரின் முன் அனுமதியை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.642அனுமதிக்கப்பட்டது.**

23) நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை. அரசாணை (M,A.W) எண்.73. நாள்.19.07.2018ன்படி, இந்நகராட்சி பகுதிகளில் உள்ள குடியிருப்பு கட்டிடங்கள், வாடகை குடியிருப்பு கட்டிடங்கள், மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டிடங்கள் ஆகியவற்றிற்கு 1.04.2018 முதல் சொத்துவரி கீழ்கண்டவாறு உயர்வு செய்ய ஆணையிடப்பட்டது.

| **இனம்** | **சொத்துவரி சீராய்வின்படி உயர்வு செய்ய பரிந்துரை செய்யும் சதவீதம்** |
|---|---|
| குடியிருப்பு கட்டிடங்கள். | 50 சதவீதத்திற்கு மிகாமல். |
| வாடகை குடியிருப்பு கட்டிடங்கள். | 100 சதவீதத்திற்கு மிகாமல். |
| குடியிருப்பு அல்லாத கட்டிடங்கள். | 100 சதவீதத்திற்கு மிகாமல். |

மேலும், மேற்படி அரசாணையினை தொடர்ந்து நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை. அவர்களால் வெளியிடப்பட்ட அரசாணை (M,A.W) எண்.76. நாள்.26.07.2018ல் வாடகை குடியிருப்பு கட்டிடங்களுக்கு சொத்துவரி உயர்வுக்கான பரிந்துரை சதவீதம் 100 என்பதை நீக்கம் செய்து திருத்தம் மேற்கொண்டு அரசாணை அட்டவணையில் நீக்கம் செய்து வெளியிட்டுள்ளது. எனவே இதன்படி நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.20555/2018/ஆர்1, நாள்.30.7.2018ன்படி சொத்துவரி சீராய்வு சதவீதப்பரிந்துரையின்படி மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது.

| **இனம்** | **சொத்துவரி சீராய்வின்படி உயர்வு செய்ய பரிந்துரை செய்யும் சதவீதம்** |
|---|---|
| குடியிருப்பு கட்டிடங்கள். | 50 சதவீதத்திற்கு மிகாமல். |
| குடியிருப்பு அல்லாத கட்டிடங்கள். | 100 சதவீதத்திற்கு மிகாமல். |

எனவே மேற்காணும்படி வரப்பட்ட அரசாணை மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் வழிகாட்டு நெறிமுறைகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு

மேற்கண்ட அரசாணைகள் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் வழிகாட்டு நெறிமுறைகளில் தெரிவிக்கப்பட்ட குடியிருப்பு கட்டிடங்களுக்கு 50சதவீதம் மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு 100சதவீதம் என 1.4.2018 முதல் வரிஉயர்வு செய்ய அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.643அனுமதிக்கப்பட்டது.**

24) நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அரசாணை (M.A.W) எண்.76. நாள்.26.07.2018ன்படி, 1.4.2018 முதல் சொத்துவரியினை உயர்வு செய்ய ஆணையிடப்பட்டு உயர்வு செய்யப்படும், மேற்படி விவரத்தினை பத்திரிக்கை மற்றும் ஆட்டோ ரிக்ஷா மூலம் விளம்பரம் செய்வதுடன், பொதுமக்களுக்கு சுயமதிப்பீட்டு படிவம் வழங்கி அதனை பூர்த்தி செய்து பெற வேண்டியுள்ளது. இந்நகராட்சியில் இன்றைய தேதியில்

| இனம் | வரி விதிப்பு எண்ணிக்கை. |
|---|---|
| வசூலிக்க வேண்டிய மற்றும் வழக்கு சம்மந்தப்பட்ட சொத்துவரி உள்ள கட்டிடங்கள். | 49779 |
| தொழிற்சாலை இனங்களில் சொத்துவரி உள்ள கட்டிடங்கள். | 919 |
| வணிக இனங்களில் சொத்துவரி உள்ள கட்டிடங்கள். | 5516 |
| நிகர மொத்த குடியிருப்பு கட்டிடங்கள். | 43344 |

இதன்படி உத்தேசமாக வரிவிதிப்புகள்.55000க்கு சுயமதிப்பீட்டு படிவங்கள் பெற ஒப்பந்தப்புள்ளி கோரி பெறவும், மற்றும் விளம்பரச் செலவினத்திற்காகும் உத்தேச செலவினங்களுக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.அ2/4237/2018.)

அ.கு– அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.644அனுமதிக்கப்பட்டது.**

25) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, முதன்மைச்செயலாளர், நகராட்சி நிர்வாக ஆணையாளர், மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் ஆகியோர்களின் ஆய்வுக்கூட்டங்களில் தெரிவித்துள்ளவாறு, இந்நகராட்சி பகுதியில் 2017ம் வருடத்தில் சொத்துவரி உயர்வு செய்யப்பட்டது. இதனை எதிர்த்து இந்நகராட்சி வார்டு எண்.5, கதவு எண்.211எ,தர்மாபுரம் தெருவினைச்சேர்ந்த திரு.என்.எஸ்.ராமராஜ், என்பவர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, முதன்மைச்செயலாளர், நகராட்சி நிர்வாக ஆணையாளர், மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் ஆகியோர்களை முதல் மூன்று பிரதிவாதிகளாகவும், நான்காம் பிரதிவாதியாக நகராட்சி ஆணையர் இராஜபாளையம் அவர்களையும் சேர்த்து வழக்கு எண். W.P(MD) No.2458, WMP(MD) No.2659/2018. வழக்கு தொடர்ந்துள்ளார். இவ்வழக்கினை நகராட்சி வழக்கறிஞர் திரு. என்.திலிப்குமார், மதுரை அவர்களால் எடுத்து நடத்தப்பட்டது. மேலும் இவ்வழக்கானது அவசர வழக்காக எடுத்து விசாரணை செய்து நகராட்சிக்கு சாதகமாக தள்ளுபடி செய்யப்பட்டு 7.3.2018ல் தீர்ப்பு வழங்கியது. இவ்வழக்கினை நகராட்சி சார்பாக நகராட்சி வழக்கறிஞர் திரு.என்.திலிப்குமார்,மதுரை அவர்கள் ஆஜராகி நடத்தி கொடுத்தமைக்கும், வழக்கிற்கான செலவுத்தொகைக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.9112/2010/எ1)

அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.645அனுமதிக்கப்பட்டது.**

ஆணையாளர்/தனி அலுவலர்
இராஜபாளையம் நகராட்சி